# <u>தேர்தல் நடத்தை விதிமுறைகள்- அரசு அலுவலர்களுக்கான வழிகாட்டுதல்கள்</u>

**<u>அமலாக்க காலம் :</u>**

*தேர்தல் ஆணையம் தேர்தல் தேதியை அறிவிக்கும் அந்த நிமிடம் முதல் நடத்தை விதிகள் அமலுக்கு வரும். தேர்தல் நடைமுறைகள் முடிவடைந்து, ஆணையம் அறிவிக்கும் வரை இது நடைமுறையில் இருக்கும்.*

**<u>பொருந்தும் எல்லை :</u>**

*மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களைப் பொறுத்தவரை, அந்த மாநிலம் முழுவதும் இந்த விதிகள் பொருந்தும்.*

**<u>பொருந்தக்கூடிய நபர்கள்/அமைப்புகள் :</u>**

*மாதிரி நடத்தை விதிகள் கீழே குறிப்பிட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் பொருந்தும்:*

- ✓ *அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள்.*
- ✓ *அரசு பணியாளர்கள்.*
- ✓ *ஊடகங்கள் (Media).*
- ✓ *சமூக ஆர்வலர்கள் / சிவில் சமூகம்.*
- ✓ *வாக்காளர்கள்.*
- ✓ *மத்திய அரசு அல்லது மாநில அரசால் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிதியளிக்கப்படும் அனைத்து அமைப்புகள் /குழுக்கள், ஆணையங்கள், வாரியங்கள் மற்றும் நிறுவனங்கள்.*

**1. <u>விளம்பரங்களை அகற்றுவதற்கான காலக்கெடு :</u>**

*அனுமதியற்ற தேர்தல் விளம்பரங்கள், விளம்பர பலகைகள், புகைப்படம் சுவரொட்டிகளை, சுவர் எழுத்துக்கள், சின்னங்கள் மற்றும் கொடிகள் அகற்ற வேண்டிய காலக்கெடு:*

- ✓ **<u>அரசு இடங்கள்</u>** *: தேர்தல் அறிவிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள்.*
- ✓ **<u>பொது இடங்கள்</u>** *: (இரயில் நிலையம், பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள், இரயில்வே பாலங்கள், சாலைகள், அரசு பேருந்துகள், மின்சாரம் / தொலைபேசி கம்பங்கள்): 48 மணி நேரத்திற்குள்.*
- ✓ **<u>தனியார் இடங்கள்</u>** *: 72 மணி நேரத்திற்குள்.*

**2. <u>அரசு கட்டிடங்கள் மற்றும் அரசு வாகனங்கள் கட்டுப்பாடுகள் :</u>**

- ✓ *தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் (M.L.A, M.P) அலுவலகங்களை பூட்டி பொதுப்பணித்துறை வசம் சாவி ஒப்படைக்கப்பட வேண்டும்.*
- ✓ *அரசு விருந்தினர் மாளிகைகளில் எந்த ஒரு அரசியல் கட்சியினரும் அனுமதிக்கப்பட கூடாது.*
- ✓ *தேர்தல் பிரச்சாரம் அல்லது தேர்தல் தொடர்பான பயணங்களுக்கு எந்தவொரு அரசியல் கட்சியோ, வேட்பாளரோ அல்லது தேர்தல் தொடர்பான நபர்களோ அரசு வாகனங்களைப் பயன்படுத்த முழுமையான தடை விதிக்கப்படுகிறது.*
- ✓ *தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் வாரியத் தலைவர்கள் ஆகியோர் உபயோகப்படுத்தும் அரசு வாகனங்களை திரும்ப பெற வேண்டும்.*

- ✓ *அரசு வாகனம் என்பது மத்திய/மாநில அரசு, பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள் அல்லது பொது நிதி முதலீடு செய்யப்பட்ட எந்தவொரு அமைப்பிற்கும் சொந்தமான வாகனங்களைக் குறிக்கும்.*

### *3. <u>அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு இணையதளங்களில் புகைப்படங்கள்/ செய்திகள் :</u>*

- ✓ *தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்ட நாள் முதல் எந்த ஒரு அரசு அலுவலகங்களிலும் அரசியல் சார்ந்த படங்கள், காலண்டர்கள், நலத்திட்ட ஸ்டிக்கர்கள், பிரதமர், முதலமைச்சர், அமைச்சர்களின் படங்கள் வைத்துக் கொள்ள கூடாது. அவை உடனடியாக அகற்றப்பட வேண்டும்.*

- ✓ *அரசு இணையதளங்கள் மற்றும் கட்டிடங்களில் உள்ள அமைச்சர்கள் அல்லது அரசியல் தலைவர்களின் புகைப்படங்கள் மற்றும் சாதனைகள் குறித்த செய்திகளை நீக்க வேண்டும் அல்லது மறைக்க வேண்டும்.*

- ✓ *குடியரசுத் தலைவர், ஆளுநர் மற்றும் மறைந்த தலைவர்களின் (காந்தி, இந்திரா காந்தி, படேல், போன்றோர்) படங்களை காட்சிப்படுத்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

- ✓ *சமீபத்தில் மறைந்த தலைவர்களைத் தவிர்த்து, மற்ற மறைந்த அரசியல் தலைவர்களின் படங்களைக் காட்சிப்படுத்தலாம்.*

- ✓ *இது குறித்த விதிமுறைகளைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் (CEO) மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் (DEO) தேர்தல் அறிவிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் நடைமுறைப்படுத்த வேண்டும்.*

### *<u>4. நலத்திட்டங்கள் :</u>*

- ✓ *துறை சார்ந்த நலத்திட்ட விழாக்கள் நடத்திட அனுமதி இல்லை.*

- ✓ *சிறப்பு மருத்துவ சிகிச்சை மற்றும் கால்நடைகள் மருத்துவ சிகிச்சைகளின் போது விளம்பர பேனர்கள் வைத்திருக்க கூடாது.*

### *<u>5. கூட்டங்கள் :</u>*

- ✓ *மக்கள் குறைதீர்வு நாள் மனுக்கள் மற்றும் இதர மனுக்கள் பெறும் நிகழ்வுகள் தடை செய்யப்படுகிறது.*

- ✓ *மாநிலங்களின் முதலமைச்சர்கள், அமைச்சர்கள் மற்றும் ஒன்றிய, மாநில அரசுகளின் பிற அரசியல் பிரமுகர்கள் மற்றும் அலுவலர்களுக்கிடையே தனித்தனியாக அல்லது கூட்டாக காணொலி காட்சி மூலம் ஆய்வுகள் நடைபெறக்கூடாது.*

- ✓ *மத்திய அல்லது மாநில அமைச்சர்கள் எவரும், மாநில/மாவட்டத்தின் தேர்தல் தொடர்பான அலுவலர்களை கூட்டங்களுக்கு அழைக்க முடியாது. ஆனால், சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்குலைதல் அல்லது இயற்கை பேரிடர் அல்லது இதுபோன்ற அவசரநிலைகள் ஏற்படும்போது கூட்டங்கள் நடைபெறலாம்.*

- ✓ *நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகள் மற்றும் பிற உள்ளாட்சி அமைப்புகளால் தவிர்க்க முடியாத சட்டப்படியான கூட்டங்களை நடத்துவதற்கு ஆணையத்தின் எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால், தேர்தல் முடியும் வரை இத்தகைய கூட்டங்களில் எந்த புதிய கொள்கை முடிவுகளும் அறிவிப்புகளும் செய்யப்படக் கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, அன்றாட நிர்வாக பிரச்சினைகள் மற்றும் அவசர பிரச்சினைகள் தொடர்பான முடிவுகள் மட்டுமே இத்தகைய கூட்டங்களில் எடுக்கப்படலாம்.*

## *6. அரசு விளம்பரங்கள் வழிகாட்டுதல்கள் :*

- ✓ *அரசு விளம்பரங்கள் அரசியல் நடுநிலையைப் பேண வேண்டும். அரசியல் தலைவர்களை மிகைப்படுத்தும் விளம்பரங்கள் மற்றும் ஒரு கட்சிக்கு ஆதரவான விளம்பரங்கள் உருவாக்குவதை தவிர்க்க வேண்டும்.*
- ✓ *விளம்பரப் பொருட்கள் ஆளும் கட்சியின் பெயரை குறிப்பிடக்கூடாது அல்லது எதிர்க்கட்சிகளின் கருத்துக்களைத் தாக்கக்கூடாது.*
- ✓ *கட்சி சின்னங்கள் அல்லது கொடிகளை உள்ளடக்கக்கூடாது.*
- ✓ *அரசு செய்திகளைத் திறம்பட கொண்டு சேர்க்கத் தேவைப்பட்டால் மட்டுமே குடியரசுத் தலைவர் அல்லது பிரதமரின் புகைப்படங்களைப் பயன்படுத்தலாம்.*

## *7. திட்டங்கள் செயல்படுவதற்கான கட்டுப்பாடுகள் பின்வருமாறு :*

### *A). தொடரக்கூடிய பணிகள் :*

*பின்வரும் பணிகளைத் தேர்தல் ஆணையத்தின் முன்அனுமதி இன்றி அரசு முகமைகள் தொடரலாம்:*

- ✓ *முழு நிதியுதவி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளவை.*
- ✓ *நிர்வாக, தொழில்நுட்ப மற்றும் நிதி ஒப்புதல்கள் பெறப்பட்டுள்ளவை.*
- ✓ *டெண்டர் அறிவிக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ள இனங்கள்.*
- ✓ *ஒரு திட்டத்திற்கு ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலும், நடத்தை விதிகள் அமலுக்கு வரும்போது களத்தில் பணிகள் தொடங்கப்படவில்லை எனில், தேர்தல் முடியும் வரை அந்தப் பணியைச் செயல்படுத்தக்கூடாது.*
- ✓ *குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பணியைத் தொடங்கவும் முடிக்கவும் ஒப்பந்த கடமை உள்ளது, மேலும் தவறினால் ஒப்பந்ததாரருக்கு அபராதம் விதிக்கும் கடமை உள்ளவை.*
- ✓ *தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வரும் முன்பே, பெயரிடப்பட்ட பயனாளிகள் கண்டறியப்பட்ட பயனாளி சார்ந்த திட்டங்கள்.*
- ✓ *நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி, நிதித்துறையின் ஒப்புதலுடன், முடிவடைந்த பணிகளுக்கான நிதியை விடுவித்தல்.*
- ✓ *முதலமைச்சரின் நிவாரண நிதி அல்லது பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து நோயாளிகளுக்கு நேரடியாகப் பணம் வழங்குவதற்குப் பதிலாக, மருத்துவமனைகளுக்கு நேரடியாகச் செலுத்தப்படும் தொகைகள்.*
- ✓ *ஒத்திவைக்க முடியாத இதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை போன்ற பல்வேறு நேர வரையறை கொண்ட சிகிச்சைகளுக்கு பிரதமரின் நிவாரண நிதி அல்லது முதலமைச்சரின் நிவாரண நிதியின் கீழ் மருத்துவ உதவியை தொடர்புடைய அரசு அதிகாரிகள் அல்லது தனியார் மருத்துவமனைகளின் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நோயாளிகளுக்கு வழங்குதல்.*

### *B). புதிய பணிகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டவை) :*

- ✓ *புதிய திட்டங்கள், சலுகைகள் அல்லது நிதி உதவித் தொகைகளை அறிவிப்பது அல்லது அதற்கான வாக்குறுதிகள் அளிப்பது அல்லது அடிக்கல் நாட்டுதல் போன்றவை தடைசெய்யப்பட்டுள்ளன.*

- ✓ *புதிய பணிகள் (பயனாளி அல்லது பணி சார்ந்தவை) தேர்தல் ஆணையத்திற்குத் தகவல் தெரிவித்துவிட்டுத் தொடங்கப்படலாம். ஆனால், நடத்தை விதிகள் அமலுக்கு வரும் முன்பே பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்:*

- ✓ *பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்டவர்களின் துயரத்தைத் தணிக்க எடுக்கப்படும் அவசரகால நிவாரணப் பணிகள்.*

***C). தேர்தல் ஆணையத்தின் முன்அனுமதி தேவையான பணிகள் :***

*பின்வரும் நடவடிக்கைகளுக்குத் தேர்தல் ஆணையத்தின் முன்அனுமதி கட்டாயம்:*

- ✓ *எந்தவொரு விருப்ப அதிகார நிதியிலிருந்தும் (Discretionary funds) புதிய பணிகளையோ திட்டங்களையோ தொடங்குதல்.*

- ✓ *தற்போதுள்ள திட்டங்களின் செயல்பாட்டுப் பகுதியை விரிவுபடுத்துதல்.*

- ✓ *தனிநபருக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அரசு நிலம் ஒதுக்கீடு செய்தல்.*

- ✓ *சர்வதேச டெண்டர்கள் தவிர்த்து, ஏற்கனவே விடப்பட்ட மற்ற டெண்டர்களை இறுதி செய்தல் (மதிப்பீடு செய்யலாம், ஆனால் இறுதி செய்யக்கூடாது). டெண்டர்கள் இதுவரை விடப்படவில்லை எனில், அனுமதி இன்றி வெளியிடக்கூடாது.*

- ✓ *ஏற்கனவே உள்ள தினக்கூலி அல்லது நிவாரண விகிதங்களில் மாற்றங்கள் செய்தல்.*

- ✓ *இயற்கை பேரிடர்களைத் தடுக்க மேற்கொள்ளப்படும் புதிய தடுப்பு நடவடிக்கைகள் (உதாரணமாக: அணைக் கரைகளை சரி செய்தல்).*

- ✓ *ஒரு பகுதியை வறட்சி அல்லது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவித்தல்.*

- ✓ *விதிவிலக்கான சூழலில் (வறட்சி பாதித்த பகுதிகளில்) குடிநீர் லாரிகள் மூலம் நீர் வழங்குதல், புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் மற்றும் கால்நடைகளுக்குத் தீவனம் வழங்குதல் போன்ற பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

- ✓ *இதேபோல், பிரதமரின் அல்லது முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து குறிப்பிட்ட குழுவினருக்கு எந்தவித தேர்ந்தெடுக்கப்பட்ட உதவியும் வழங்குவதற்கு ஆணையத்தின் முன் அனுமதி தேவை.*

- ✓ *நலிவடைந்த பொதுத்துறை நிறுவனங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், அரசாங்கத்தால் நிறுவனங்களை கையகப்படுத்துதல் போன்ற பணிகள்.*

- ✓ *வருடாந்திர ஏலங்கள் மற்றும் மதுபானக் கடைகளின் புதிய ஏலங்களை நடத்திட அனுமதி தேவை.*

***8. பணி நியமனக் கட்டுப்பாடுகள் :***

- ✓ *தற்காலிகப் பணி நியமனங்கள் செய்யக்கூடாது.*

- ✓ *சட்டரீதியற்ற அமைப்புகள் (Non-statutory bodies) மூலம் மேற்கொள்ளப்படும் நியமனங்களுக்குத் தேர்தல் ஆணையத்தின் முன்அனுமதி பெற வேண்டும்.*

- ✓ *அரசின் புதிய நலத்திட்டங்களை தொடங்குதல் மற்றும் புதிய பயனாளிகள் தேர்வு செய்தல் நிறுத்தி வைக்கப்படுகிறது.*

***9. தேர்தல் தொடர்பான அதிகாரிகளை இடமாற்றம் செய்ய தடை :***

- ✓ *தேர்தல் பணிகள் தொடர்புடைய அலுவலர்களின் பணிஇடமாற்றம்.*

- ✓ *மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தேர்தல் நடத்தையுடன் தொடர்புடைய பிற வருவாய் அலுவலர்கள்.*

- ✓ *மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 இன் பிரிவு 28A இன் கீழ் சரக IG-க்கள் மற்றும் DIG-க்கள், மூத்த காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் போன்ற துணைப் பிரிவு அளவிலான காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆணையத்திற்குப் பணியமர்த்தப்பட்ட பிற காவல்துறை அதிகாரிகள் போன்ற தேர்தல் நிர்வாகத்துடன் தொடர்புடைய காவல் துறை அதிகாரிகள்.*

- ✓ *தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்ட பிற அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், போக்குவரத்து பிரிவு, வாக்குப்பதிவு பொருட்கள் கொள்முதல் மற்றும் விநியோக பிரிவு, பயிற்சி பிரிவு, அச்சு பிரிவு போன்றவை. தேர்தல் நிர்வாகத்தில் பங்கு வகிக்கும் மூத்த அலுவலர்களும் இந்த வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டவர்கள்.*

- ✓ *இந்த தடை தேர்தல் செயல்முறை முடிவடையும் வரை செயல்பாட்டில் இருக்கும்.*

- ✓ *இந்த காலகட்டத்தில், அரசு / பொது நிறுவனங்களில் எந்த நியமனங்கள் அல்லது பதவி உயர்வுகள் தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி இல்லாமல் செய்யப்பட கூடாது.*

***10. MP/MLA தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் விருப்ப அதிகார நிதி கட்டுப்பாடுகள் :***

- ✓ *மாதிரி நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் காலத்தில், MPLAD திட்டத்தின் கீழ் எந்த ஒரு புதிய திட்டத்திற்கும் அனுமதி அளிக்கக்கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.*

- ✓ *இருப்பினும், ஒரு பணி ஏற்கனவே களத்தில் தொடங்கப்பட்டிருந்தால், அதைத் தொடர்ந்து நடத்தலாம்.*

- ✓ *தேர்தல் நடைபெறும் நாட்டின் எந்தப் பகுதியிலும் MPLAD (மாநிலங்களவை உறுப்பினர்கள் உட்பட) நிதியின் கீழ் புதிய நிதி விடுவிப்பு செய்யப்படக்கூடாது.*

- ✓ *இதேபோல், MLA/MP தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழும் புதிய நிதி விடுவிப்புகள் தேர்தல் முடியும் வரை செய்யப்படக்கூடாது.*

- ✓ *முடிவடைந்த பணிகளுக்கான தொகையை விடுவிப்பதற்குத் தடை ஏதுமில்லை.*

- ✓ *திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டு, பொருட்கள் தளத்திற்கு வந்து சேர்ந்திருந்தால், அத்திட்டத்தை நிரல்தவறாமல் செயல்படுத்தலாம்.*

***11. கடன் தள்ளுபடி மற்றும் வராக்கடன்கள் :***

- ✓ *மாநில அரசால் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிதியளிக்கப்படும் நிதி நிறுவனங்கள், தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு வழங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்யக்கூடாது.*

- ✓ *தேர்தல் ஆணையத்தின் முன்அனுமதியின்றி எதையும் தள்ளுபடி செய்யக்கூடாது மற்றும் புதிய கடன்களை வழங்கக்கூடாது.*

***<u>12. பொது நிதியில் விளம்பரங்கள் வெளியிடுதல் :</u>***

- ✓ *தேர்தல் காலத்தில் பொது நிதியைப் பயன்படுத்தி விளம்பரங்கள் வெளியிடுவது குறித்து தேர்தல் ஆணையம் மிகுந்த கவனம் செலுத்துகிறது.*

- ✓ *ஆளும் கட்சியின் சாதனைகளை விளம்பரப்படுத்துவதற்கும், அதன் தேர்தல் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் அரசு நிதியைப் பயன்படுத்துவதை நடத்தை விதிகள் கட்டுப்படுத்துகின்றன.*

- ✓ *சாதனைகளை விளக்கும் விளம்பரங்கள் ஏற்கனவே ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தால், அவற்றை உடனடியாக நிறுத்த வேண்டும்.*

- ✓ *குடும்பக் கட்டுப்பாடு, சமூக நலத் திட்டங்கள் போன்ற பொதுவான தகவல்களைத் தரும் விளம்பரத் தட்டிகளைத் தொடர்ந்து காட்சிப்படுத்தலாம்.*

- ✓ *உலக இருப்பிட நாள் (World Habitat Day), போலியோ சொட்டு மருந்து, எய்ட்ஸ் விழிப்புணர்வு போன்ற சிறப்பு தின விளம்பரங்களை வெளியிடத் தடை இல்லை, ஆனால் அவற்றில் புகைப்படங்களைப் பயன்படுத்தக்கூடாது.*

***<u>13. பள்ளி மைதானங்களை பிரச்சாரத்திற்கு பயன்படுத்துதல் – விதிமுறைகள் :</u>***

- ✓ ***கல்விச் செயல்பாடுகள்**: பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் கல்வி அட்டவணை அல்லது வகுப்புகள் எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது.*

- ✓ ***பள்ளி நிர்வாகத்தின் அனுமதி**: மைதானத்தைப் பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகத்திடம் இருந்து முறையான அனுமதி பெறப்பட வேண்டும்.*

- ✓ ***அரசு அலுவலர் அனுமதி**: பள்ளி நிர்வாகத்தின் அனுமதியுடன், துணை கோட்ட அலுவலரிடமிருந்தும் (Sub Divisional Officer) உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.*

- ✓ ***முன்னுரிமை அடிப்படை**: மைதானங்கள் 'முதலில் வருபவருக்கே முன்னுரிமை' (First-come, first-served) என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட வேண்டும்.*

- ✓ ***முற்றுரிமைத் தடை**: எந்தவொரு அரசியல் கட்சியும் இத்தகைய மைதானங்களைத் தனது சொந்தக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவோ அல்லது முற்றுரிமை (Monopolize) பெறவோ கூடாது. அனைத்துக் கட்சிகளுக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்*